# நாற்றங்கால் நுட்பங்கள் - சவுக்கு மற்றும் தைல மரங்கள்

1. தரைமட்டதிலிருந்து சற்று உயர்வாக அமைக்கப்பட்ட 10 x 1 மீ அளவுள்ள பாத்திகளை மணலும் மக்கிய உரமும் கலந்து அமைக்க வேண்டும்.

2. நன்கு நீர்பாச்சிய பாத்திகளின் மேல் விதைகளை மணலுடன் கலந்து சீராகத் தூவ வேண்டும்.

3. இதன் மேல் விதைகளை மூடும் அளவிற்கு மணலைத் தூவ வேண்டும். பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி அதன் மேல் பூவாளிகளைக் கொண்டு தண்ணீர் விட வேண்டும் இதனால் விதைகளை நீரில் அடித்துச் செல்லப்படுவதை தவிர்க்கலாம்.

4. எறும்புகள் வருவதை தடுக்க பாத்திகளைச் சுற்றி BHC அல்லது வேறு எதாவது பூச்சி விரட்டியை தூவுதல் வேண்டும்.

5. விதைகளை ஒரு வாரத்திலிருந்து முளைக்க துவங்கும். 10 நாட்களுக்குப்பின் பாத்திகளின் மேலுள்ள வைக்கோலை நீக்கி விட்டு தொடர்ந்து பூவாளியின் மூலமாக மட்டும் நீர் விட வேண்டும்.

6. ஒரு மாதம் கழித்து 10 செ.மீ உயரமுள்ள நாற்றுகளை பாலிதீன் பைகளிலோ அல்லது வேறு பாத்திகளிலோ வளர்த்து நடவுக்கு பயன்படுத்தலாம்.



சவுக்கு மர நாற்றுகள்



தைல மர நாற்றுகள்